★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: கார்த்திகை 26உ செவ்வாய் (11—12—56) ★ ★ வெளியூர்: கார்த்திகை 27உ புதன் (12—12—56) [இதழ் 157

'சர்பகந்தா' மூலிகை ஏற்றுமதிக்குத் தடை-நீக்குமாறு டில்லிக்கு சிபாரிசு

'சர்பகந்தா' என்ற அமித இரத்தக் கொதிப்பு போன்ற சில வியாதிகளுக்கு மருந்தாகப் பயன்படும் மூலிகையை ஏற்றுமதி செய்வதற்கு இருந்த தடையை நீக்குமாறு டில்லி சர்க்காருக்குச் சிபாரிசு செய்வது என்று காட்டு வள உபயோகம் பற்றிய மத்திய ஆலோசனைக் குழுவின் செயற்குழு முடிவு செய்திருக்கிறதாம்.

'சர்பகந்தா' என்ற மூலிகை ஏற்றுமதிக்குத் தடை விதித்ததால், அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகள், இதற்குப் பதிலாக வேறு மூலிகைகள் தேடுவதில் ஈடுபட்டிருக்கின்றன என்றும் குழு கூறியிருக்கிறதாம்.

துப்பாக்கிப் பிரயோகப் போக்கினைக் கைவிடுவதற்கில்லையாம்

பலாத்காரமான மக்கள் கூட்டத்தை அடக்க அதிகாரம் வேண்டுமாம்

'அகிம்சா மூர்த்தி'கள் தீவிர முடிவு

புதுடில்லி, டிச. 9—

காந்தியாரின் வாரிசுகள், மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யும் போக்கினைக் கைவிடுவதில்லை என்று முடிவு செய்திருக்கிறார்கள்.

கண்டனம்

ஏதுமறியாத மக்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்வது பற்றி, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பலத்த கண்டனம் எழுப்பப்பட்டிருக்கிறது என்பதுபற்றிப் புதுடில்லியில் எல்லா மாநில முதன் மந்திரிகளும் கூடி விவாதித்தனராம்.

பண்டித பந்த் இந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினாராம்

பலாத்காரமான மக்கள் கூட்டத்தினை அடக்குவதற்கு சர்க்காருக்கு அதிகாரம் தேவை என்பதால், துப்பாக்கிப் பிரயோகம் செய்வதைக் கொள்கையளவில் கைவிடுவதற்கில்லை என்று முடிவு செய்யப்பட்டதாம்.

ஆனால், துப்பாக்கிப் பிரயோகம் செய்யுமுன் அதிகாரிகள் எல்லா வகையான முன் எச்சரிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒவ்வொரு துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததும், உடனே ஸ்தல அதிகாரிகளைக்கொண்டு விசாரணை நடத்த வேண்டும் என்றும் முதன் மந்திரிகள் முடிவு செய்தனராம்.

சர்க்கார் ஊழியர் சம்பள விகிதம்

டில்லி ஆலோசனை நடத்துமாம்

சென்னை, டிச. 10—

ஒவ்வொரு மாநிலத்திலுமுள்ள சர்க்கார் ஊழியர்களின் சம்பள விகிதங்கள் குறித்து சீக்கிரமே அந்தந்த மாநில சர்க்காருடன் டில்லி சர்க்கார் ஆலோசனை நடத்தும் என்றும், அதன் மூலம் எல்லா மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் ஒரே வகையான ஊதியம் கிடைக்குமாறு செய்ய ஏற்பாடு செய்யப்படும் என்றும் டில்லியிலிருந்து திரும்பியுள்ள மந்திரி சுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

'144 தடையுத்தரவு அவசியமற்றது'

சர்வ கட்சித் தோழர்கள் மீதுள்ள வழக்கில் சப்-மாஜிஸ்திரேட் தீர்ப்பு

பிப்ரவரி 20-ல் தடையை மீறிய 58 பேருக்கும் விடுதலை

தேவாரம், டிச. 3—

பெரியகுளம் தாலுகா முழுவதிலும் விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவை மீறி கடந்த பிப்ரவரி 20-ந் தேதியன்று தி. மு. கழகம், பி. சோ., கம்யூனிஸ்டுக் கட்சி, தமிழரசுக் கழகம் ஆகிய கட்சியினர் ஒன்றுகூடி அர்த்தால் நடத்தத் தீர்மானித்துப் பலாத்காரத்தில் இறங்கியதாக தேவாரம், கோம்பை, பண்ணைப்புரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த 58 பேர்மீது சர்க்காரால், உத்தமபாளையம் சப்-மாஜிஸ்திரேட் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

அவ்வழக்கினை விசாரித்த சப்-மாஜிஸ்திரேட் திரு. ஜி. வி. சுப்பிரமணியம், அந்த 58 பேர்களையும் கடந்த மாதம் 30-ந் தேதி அன்று விடுதலை செய்துள்ளார்.

"பொதுமக்கள் அமைதிக்குப் பங்கம் ஏற்படாத வகையில், கட்டுப்பாடுடனும் ஒழுங்காகவும் அமைதியாகவும் ஊர்வலம் நடத்தியிருக்கின்றனர்; இந்தியக் குடிமக்கள் என்ற முறையில் ஊர்வலம், பொதுக் கூட்டம் நடத்த இவர்களுக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் உரிமை வழங்கப்பட்டிருந்தும் கூட, அந்த அடிப்படை உரிமையை மறுக்க 144 தடையுத்தரவு போடவேண்டிய அவசியமே இல்லை"

என்று, சப்-மாஜிஸ்திரேட் தமது தீர்ப்பின்போது குறிப்பிட்டார்.

மேலும், சப்-மாஜிஸ்திரேட் அவர்கள் தமது தீர்ப்பில் கூறியிருப்பதாவது:—

"இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக இத்தடையுத்தரவு போடப்பட்டிருந்ததற்கான தகுந்த காரணத்தையும், ஆதாரத்தையும் பெரியகுளம் தாசில்தாரால் காட்டமுடியவில்லை; அமைதிக்குப் பங்கம் விளைவித்துப் பலாத்காரத்தில் அவர்கள் ஈடுபட்டார்கள் என்பது போலீஸ் தரப்பில் நிரூபிக்கப்படவில்லை; இதற்கு அந்தந்தக் கிராம அதிகாரிகளே தகுந்த சாட்சிகளாவர்; விதிக்கப்பட்ட தடையுத்தரவு, பொதுமக்கள் அனைவரும் அறியும்வண்ணம் சரியாக விளம்பரப்படுத்தப்படவில்லை; அந்த 58 பேர்களில் ஒருவருக்குக்கூட 144 தடையுத்தரவைச் சார்பு செய்யவில்லை; எனவே, 'இவ்விதக் காரணங்களினால் எதிரிகள் குற்றவாளிகள் அல்ல என்று கண்டுபிடித்து, கி. பு. கோ. 251-ஏ. (11)-வது பிரிவுப்படி அவர்களை விடுதலை செய்வதைத் தவிர வேறு வழியில்லை."

தோழர்களுக்காக வழக்கறிஞர்கள் என். கே. பாகுலேயன், எம். கே. மீரான் ஆகியோர் ஆஜராணார்கள். (ச. பி.)

"மீண்டும் இம்மாதிரியான விபத்துக்கள் ஏற்படாமல் தடுக்க, நேரம், சிரமம், செலவு பாராது முழு விசாரணை நடத்தப்படும்"

என்று அரியலூர் விபத்து பற்றி விசாரணை செய்வதற்கு [illegible] மிக்கப்பட்டுள்ள [illegible]

புதிய மாநில அமைப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள்

மண்டலக் குழு நிலை என்ன?

பொதுத் தேர்தலுக்கு முன்னர் மண்டலக் குழுக்கள் கூடி, புதிய மாநில அமைப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்கும் என்று தெரியவருகிறது.

உள்நாட்டு இலாகா அமைச்சர் தலைமையில் கூடிய மாநிலப் பிரதமர்கள் இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மரணமடைவோர்

எண்ணிக்கையைக் குறைக்க புதிய முறையா?

கட்டாய விசாரணை இல்லை?

புதுடில்லி, டிச. 9—

கட்டுக்கடங்காத மக்கள் கூட்டத்தின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்படும்போது மரணமடைவோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக, இனி சிறுதுவார துப்பாக்கியைப் போலீசார் உபயர்கிக்கும் பிரச்சினை பரிசீலனையில் உள்ளதாம்.

ஒவ்வொரு சமயமும் கட்டாய சட்ட விசாரணை நடத்துவது கூடாது என்றும், யாராவது ஒரு பெரிய அதிகாரி விசாரணை நடத்தினால் போதும் என்றும் மாநில முதலமைச்சர்கள் கருதுவதாகத் தெரிகிறது.

சிற்றுண்டி வண்டி இணைப்பு

கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில், ஒரு புதிய சிற்றுண்டி வண்டி இணைக்கப்பட்டுள்ளதாம்; இம்மாதிரியான வண்டிகள் மேலும் 4-துரிதமாக தயாரிக்கப்பட்டு வருவதாக மக்கள் சபையில் அமைச்சர் அழகேசன் அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் மேயருக்குக் கட்சியிலிருந்து 'கல்தா'!

குவாலியர் டிச. 10—

காங்கிரஸ் 'மேயர்' ஒருவருக்குக் கட்சியிலிருந்து தற்காலிகமாகக் 'கல்தா' கொடுக்கப்பட்டிருக்கிறது, இங்கு!

'வி. எம். பகவத் என்ற காங்கிரஸ்காரர், எதிர்க் கட்சியினரால், நகரசபையின் தலைவராக்கப்பட்டதே இந்த நடவடிக்கைக்குக் காரணம்' என்று, கௌதம் ஷர்மா என்ற காங்கிரஸ் தலைவர் கூறியிருக்கிறார்.

கடந்த நவம்பர் 14-ந் தேதியன்று, காங்கிரசல்லாத உறுப்பினர்களால் இவர் நகர சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அப்போது இவர், 'நான் காங்கிரசின் சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட முடியாது; ஏனெனில், அது நான் வகிக்கும் உயர்ந்த பதவியின் பொறுப்புகளுக்கு முரணானதாகும்' என்று கூறினாராம்!

காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் இவர், 'எல்லாக் காங்கிரஸ் நகர சபை உறுப்பினர்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும்' எனக் கோரினாராம்! இதனை மேலிடம் ஏற்க மறுத்துவிட்டதாம்! அதைத் தொடர்ந்து, இவர் இப்போது கட்சியின் ஒழுங்குமுறைகளுக்குத் தவறி நடந்ததாகக் கட்சியிலிருந்து விலக்கிவைக்கப்பட்டிருக்கிறாராம்!

'காஷ்மீர் பிரச்சினை இன்னும் தீர்க்கப்படவில்லை'

'இந்தியா-பாகிஸ்தான் நாடுகளின் பிரத்தியேகப் பிரச்னையாகும் அது'

சீனப் பிரதமர் சௌ-என்-லாய் விளக்கம்

இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவுள்ள காஷ்மீர் பிரச்சினைக்கு இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு சகோதர நாடுகளும் சுமுகமான ஒரு முடிவு காணுவர் என்று சீனப் பிரதமர் சௌ-என்-லாய் கல்கத்தாவில் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

கேள்வி:

"இந்தியாவின் பிரதேச உரிமைகளைக் காப்பாற்றுவதில் இந்தியாவோடு சீனாவும் சேர்ந்து நிற்கும் என்று நீங்கள் டில்லி மக்கள் சபையில் பேசும்போது குறிப்பிட்டீர்களே, அப்போது காஷ்மீரையும் சேர்த்துத்தான் குறிப்பிட்டீர்களா?" என்று ஒரு நிருபர் அவரிடம் கேட்டார்.

பதில்:

'காஷ்மீர் பிரச்சினை, இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் மட்டுமே பொறுப்புள்ள பிரத்தியேகமான பிரச்சினையாகும்; இந்தப் பிரச்சினை திருப்திகரமாகத் தீர்க்கப்பட்டு விடும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியாவும் பாகிஸ்தானும் சகோதர நாடுகள்; இந்த நாடுகளின் மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள்; இவர்களிடையே தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளே இருக்க முடியாது' என்று அந்தக் கேள்விக்கு சௌ-என்-லாய் பதில் தந்திருக்கிறார்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தின் கொலைத் தொழில் தீவிரமாகிறது

தினம் நூற்றுக்கணக்கான அல்ஜீரியர்கள் படுகொலை செய்யப்படுகின்றனர்

அல்ஜீயர்ஸ், டிச 9—

கடந்த இரு நாட்களில் மட்டும் பிரெஞ்சு இராணுவத்தினர் அல்ஜீரிய தேசீய வாதிகளில் 180 பேர்களைக் கொன்றனர் என்றும், 80 பேர்களைச் சிறைப்படுத்தினர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இதற்கு முந்திய இரு நாட்களில் 45 பேர்களைக் கொன்றனர் என்றும், பலரைக்கைதுசெய்தனர் என்றும் தெரியவருகிறது

நம் நாடு
தி.மு.க.வின் இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 11-12-'56 செவ்வாய்

'தலைப்பின்னை'கள் அறியாதனவா?

படித்துவிட்டு வேலையற்றிருப்போர் தொகை 5,50,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறதாம், திட்டக் குழு நியமித்த ஆய்வுக் குழுவினால்.

முன்னாள் நிதி மந்திரி சிந்தாமண் தேஷ்முக், இத்தகவலை ஆந்திரப் பல்கலைக்கழகப் பட்ட மளிப்பு விழாவில் பேசும் போது தந்திருக்கிறார்.

குழு, இந்தக் கணக்கெடுப்பைப் மேற்கொள்ளுவதற்குப் பெரும்பாலும், நிறுவப்பட்டிருக்கிற வேலை தேடித்தரும் அலுவலகங்களையே நம்பியிருக்கும் என்று யூகிக்கிறோம். வேலை தேடித்தரும் நிறுவனங்களின் கையாலாகாத்தனத்தையும், பாரபட்சமான போக்கையும், வீண் காலதாமதம் செய்யும் அசட்டையையும் கருத்தில் கொண்டு, அதனை நாடாமலேயே வேலை தேடி அலையும் படித்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம், குழுவின் இந்தக் கணக்கெடுப்பிற்கு உட்பட்டிருப்பார்கள் என்று கொள்வதற்கில்லை. அவர்களது தொகை இன்னும் பல இலட்சம் இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

படித்தவர்கள் என்று சர்க்கார் கணக்கிடுவது, குறைந்த பட்ச பொதுக் கல்விக்குத் தகுதியான பத்தாம் வகுப்பு வரை படித்தவர்களையே என்றும் நாம் யூகிக்க வேண்டியிருக்கிறது. இந்த வகுப்புக்கு ஒரிரண்டு படிவங்கள் குறைவாகப் படித்து வேலையற்றிருப்போர் தொகை இன்னும் பல இலட்சம் இருக்கும் என்பதையும் கவனித்தாக வேண்டும்.

மாஜி மந்திரியின் கணக்குப் படியே, ஐந்தரை இலட்சத்திற்கும் அதிகமான படித்தவர்கள் வேலையற்றிருக்கிறார்கள் என்ற உண்மை, மக்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்டவர்களின் கூரிய கவனத்திற்குரியதாகும்.

தேஷ்முக், இவர்களது எதிர்காலத்தைப் பற்றிச் சொல்லுகையில், ரூ. 130 கோடி செலவில், இவர்களில் 2,35,000 பேருக்கு வேலை தருவதற்கான திட்டங்கள் தயாரித்துவருவதாகக் கூறுகிறார்.

மொத்தமாக படித்த வேலையற்றோர் தொகை, அவர் தரும் கணக்குப்படியே ஐந்தரை இலட்சம்; ஆனால், வேலை தருவதற்காகத் தீட்டப்படும் திட்டமோ, அதில் பாதிக்கும் குறைவான பேர்களுக்கே வேலை தருமாம்; எஞ்சியவர்களின் நிலைகுறித்து அவர் ஏதும் கூறக்காணோம். பொதுவாக, படித்த வேலையற்றோர் பிரச்சினை, தொல்லை தரும் நிலையிலிருந்து மாறுவதற்கு இன்னும் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலம தேவைப்படுமாம்; அவர் தான் கூறியிருக்கிறார். அந்த இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில்கூட பிரச்சினை தீர்க்கப்பட்டதாக ஆகிவிடும் என்று அவர் கூறவில்லை. தொல்லை தரும் பிரச்சினையாக இருக்காதாம்; அவ்வளவுதான்!

'பாரத புத்திரர்'கள் கொலோச்சத் துவங்கிய நாளிலிருந்து இன்றுவரை, ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக, சாதிக்கப்பட்டுள்ளதாகப் பெருமையடித்துக் கொள்கிறார்களே, பெரிய மனிதர்கள்—அந்தச் சிறு சாதனைகளையும் கீழே தள்ளிவிட்டு, அவர்களைத் தலைகுனிய வைப்பதாக இல்லையா, இந்தப் பிரச்சினை?

வேலையற்றிருப்போரில், சாதாரணப் பட்டதாரிகள் மட்டுமல்ல — தொழில் நுட்ப விஞ்ஞானப் பட்டதாரிகளும் இருக்கிறார்கள் என்று சில நாட்களுக்கு முன்பு ஒரு செய்தி வந்தது. இந்த அவலச் செய்தியும் 'ஏராளமான எஞ்சினீயர்கள் தேவை; விஞ்ஞானிகள் தேவை' என்று அடிக்கடி பேசிவருகிற பெரிய மனிதர்களுக்கு வெட்கத்தைத் தரவில்லை என்றால், நாம் யாரைத் தான் நொந்து கொள்வது?

ஏற்கனவே, இரண்டாயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டாயிற்று. மேலும், ஆறாயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய்கள் செலவிடுவதற்குத் திட்டங்கள் பூர்த்தியாகிவிட்டன; சில அமுலாகி வருகின்றன. இத்தனையும் 'விழலுக்கு இரைத்த நீர்தானே?'—என்று ஐயுறும் வகையில் அல்லவா இருக்கின்றது, படித்த வேலையற்றோர் பற்றித் தரப்படும் புள்ளி விவரம்!

நாட்டில் சுமார் இருபது சதவிகிதத்தினராயிருக்கின்ற படிப்பும் பயிற்சியும் பெற்றவர்களிடையே மட்டுமே வேலையில்லாத் திண்டாட்டம் இத்தனை பெருங்கடலாய் விரிந்து கிடக்கிறது என்றால், படிப்பும் பயிற்சியுமற்ற இதர எண்பது சதவிகித மக்களிடை நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் அளவையும், அதன் கொடுமையையும் எதற்கு ஒப்பிடுவது? 'பாரத புத்திரர்'களுக்கு—அதுவும் 'தலைப் பின்னை'களுக்குத்தான் இது தெரிய வேண்டும்.

இரண்டாம் திட்ட கால இறுதியிலும்கூட, படித்த வேலையற்றோர் பிரச்சினை தீர்க்கப்படாததாகவே இருக்கும் என்பதை தேஷ்முக் ஒப்பியிருக்கிறார்.

'ஐந்தாண்டுத் திட்டங்கள் என்பவை வடநாட்டின் அபிவிருத்திக்கு மட்டுமே' என்ற உண்மையைக்கூட, முன்பு ஒருமுறை, புள்ளி விவரங்கள் அளித்ததின் மூலம் இதே தேஷ்முக், தான் நிதி மந்திரியாயிருந்த நாட்களில் ஒப்பியிருக்கிறார்.

இப்படி, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டு அபிவிருத்தியடைந்து வரும் வடநாட்டையும் சேர்த்துக கணக்கிடும்போதே வேலையில்லாத் திண்டாட்டம் இத்தனை கடுமையானதாக இருக்கிறதென்றால், அபிவிருத்திக்கு வாய்ப்பற்று, வடநாட்டின் 'தயவு'க்காகக் கெஞ்சிக் கேட்கும் நிலையிலிருக்கும் தென்னாட்டில், அந்தக் கொடுமையை அளவிட்டுக் கூறவே முடியாதுதான்.

திராவிடரின் நிலை இதுதான். இதனை, படித்த வாலிபர்களும், அவர்களது போஷணைக்காக முகத்தைச் சுளித்துக் கஷ்டப்படும் பெற்றோர்களும், தேர்தல் நெருங்குகிற இந்த நேரத்தில் சிந்தித்துப் பார்க்கத் தவறிவிடக்கூடாது. அவர்களை எல்லாம் சிந்திக்கச் செய்வர்—நமது கழகத் தோழர்கள் என்று நம்புகிறோம்.

படித்தவர்களை வேலையின்றித் தவிக்கவிடுவதால் ஏற்படக்கூடிய கொடிய விளைவுகளை, பாரதமாதாவின் 'தலைப்பின்னை'கள் அறியாதனவல்ல!

இந்தியாவில் தொழில் துறைத் தகராறுகள்

சில புள்ளி விவரங்கள்

புதுடில்லி, டிச. 10—

1956 செப்டம்பர் மாதத்தில் புதிதாக மொத்தம் 121 தொழில் துறைத் தகராறுகள் ஏற்பட்டன; அவற்றில் மொத்தம் 1,01 882 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர் இதற்கு முன்னிய மாதத்தில் புதிதாக ஏற்பட்ட 77 தகராறுகளில் மொத்தம் 22,002 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதத்தில் மொத்தம் 142 தகராறுகள் நீடித்துவந்தன. இவற்றில் மொத்தம் 1,10,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர். இதற்கு முன்னிய மாதத்தில் 129 தகராறுகள் நீடித்துவந்தன; அவற்றில் மொத்தம் 60,000 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இவற்றில் மூன்று தகராறுகள் கதவடைப்புகள் சம்பந்தப்பட்டவையாகும். அவற்றில் மொத்தம் சுமார் 100 தொழிலாளர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

இம்மாதத்தில் மொத்தம் 87 தகராறுகள் முடிவுற்றன. இவற்றில் 70 தகராறுகள் ஒவ்வொன்றும் 5 நாட்களுக்குமேல் நீடிக்கவில்லை. இரண்டு தகராறுகள் ஒவ்வொன்றும் முப்பது நாட்களுக்குமேல் நீடித்தன. 31 தகராறுகளில் தொழிலாளர்களுக்கு முழுவதுமோ அல்லது ஓரளவுக்கோ வெற்றி கிட்டியது. 32 தகராறுகளில் அவர்களுக்கு வெற்றி கிட்டவில்லை. 16 தகராறுகள் விஷயத்தில் முடிவு திச்சயமில்லாமலும், 8 தகராறுகளில் முடிவு தெரியாமலும் இருந்தன. தகராறுகள், பிரதானமாக 'கூலி'கள், 'படி'கள், 'ஆட்குறைப்பு' ஆகியவை பற்றியனவாக இருந்தன.

சென்னை மாநிலத்தில்

குற்றங்கள் எண்ணிக்கை

போலீஸ் நிர்வாக அறிக்கை தரும் புள்ளி விவரங்கள்

சென்னை, டிச. 10—

1955-ம் ஆண்டின் சென்னை மாநில போலீஸ் நிர்வாக அறிக்கையும், அரசாங்க விமரிசனமும் வெளியிடப்பட்டிருக்கிறது:—

பொதுவாக 1947-லிருந்து குற்றங்கள் குறைந்து வருவதாகவும், எல்லா வகைகளிலும் போலீசார் பாராட்டத்தக்க முறையில் பணி புரிந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரணக் குற்றங்கள்

1955-ல், 48 964 வழக்குகளே பதிவாகி உள்ளதாம்; 1954-ல் இருந்ததைவிட 5,624 வழக்குகள் குறைவாம்.

பெரிய குற்றங்கள்

இந்த ஆண்டில் மொத்தம் 30,761 வழக்குகளே போடப்பட்டதாம்; சென்ற ஆண்டைவிட 6,813 வழக்குகள் குறைவாம்.

கொலைக் குற்றங்கள்

சென்ற ஆண்டில் 864 ஆக இருந்தது; இவ்வாண்டில் 881 ஆக உயர்ந்துள்ளதாம்.

மதுவிலக்குக் குற்றங்கள்

சென்ற ஆண்டில் 1,47,419 ஆக இருந்தது; இந்த ஆண்டில் 1,82,472 ஆக உயர்ந்திருக்கிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

இன்னும் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்கள்!

படித்த வேலையற்றோர் பிரச்சினைக்கு பரிகாரம் தேடுமாம்

வால்டேர், டிச 9—

"படித்த வேலையற்றோர் பிரச்சினை, இன்னும் இரண்டு ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தீர்க்கப்பட்டுவிடும்,"

என்று, முன்னாள் இந்திய நிதி மந்திரி சி. டி. தேஷ்முக் இங்கு கூறினாராம்.

ரூ. 130 கோடியில் திட்டமாம்

மேலும் 2,35,000 பேருக்கு வேலை தருவதற்கான ரூ. 130 கோடி பெறுமான திட்டம் ஒன்று, திட்டக் குழுவிற்கு, அது நியமித்த ஆய்வுக்குழு சிபாரிசு செய்திருப்பதாகவும் அவர் கூறினாராம்.

மாதிரித் திட்டம்

இந்த ரூ. 130 கோடி திட்டத்தை மேற்கொள்ளுமுன் ரூ. 5 கோடி பெறுமான மாதிரித்திட்டம் ஒன்று அமுல் செய்யப்பட்டு பரீட்சிக்கப்படும் என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

தற்போது இந்தியாவில் சுமார் 5½ இலட்சம் பேர் படித்தவர்கள் வேலையில்லாமல் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சவமொழிக் கல்விக்கு சர்க்கார் தந்துவந்த ஆதரவு

குறைக்கப்பட்டதற்கு எதிராக காட்மண்டு மாணவர் அட்டகாசம்

காட்மண்டு, டிச 8—

சவமொழிப் படிப்புக்கு சர்க்கார் தந்துவந்த ஆதரவைக் குறைத்துக்கொண்டதை எதிர்த்து, இங்குள்ள சவமொழிப் பள்ளிகள், கல்லூரி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனராம்.

தங்கும் விடுதியிலிருந்து வெளியேறி மாணவர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு, சர்க்காரின் இந்தக் கல்விக் கொள்கைக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவிக்குமுகத்தான் 'அரண்மனை'க்குச் சென்று, அரண்மனை வாயிலில் தங்கள் புத்தகங்களைக் குவித்துவைத்துவிட்டுத் திரும்பினராம்.

துணி, புகையிலை, சர்க்கரை

விற்பனை வரி

இனி மத்திய அரசாங்கமே வசூலிக்குமாம்

துணி, சர்க்கரை, புகையிலை ஆகியவைகளின் மீது விதிக்கப்பட்டுள்ள விற்பனை வரியை இதுவரை மாநில அரசாங்கம் வசூலித்து வந்துள்ளது

இனி இந்த வரியை மத்திய அரசாங்கமே வசூலிக்குமாம்.

மாநிலங்களின் தேவைக்கு ஏற்றவாறு, வசூலித்த தொகையிலிருந்து பங்கு தரப்படுமாம்

இந்தியப் பேரரசின் 'பிடி'யைப் பலப்படுத்தவும், மாநில அரசுகளின் உரிமைகளை மேலும் ஊர்ஜிதப்படுத்தும் வகையிலும் இந்த முடிவுகள் தேசிய அபிவிருத்திக் குழுவில் செய்யப்பட்டுள்ளது.

வரி தராமல் பலர் ஏய்த்துவிடுகின்றனராம்; இந்தப் புதிய முறை அப்படி ஏய்ப்பவர்களை ஒழித்துவிடுமாம்

மேலும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இது உதவியாக இருக்குமாம்.

இதற்கான சட்டம் ஒன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமாம்.

மில் துணி, சர்க்கரை, புகையிலை மீது விற்பனை வரிக்குப் பதிலாக மத்திய அரசாங்கம் சுங்கவரி மீது ஒரு 'சர்சார்ஜ்' விதிக்க முடிவு செய்திருக்கிறதாகத் தெரிகிறது.

எல்லா உதவியும் அளிக்க பிரிட்டிஷார் தயாராம்!

ஆனால் தனியார் துறைக்கு உத்தரவாதம் வேண்டுமாம்

கோலை, டிச. 8—

லண்டன் 'நியூஸ் கிரானிகல்' இதழின் பிரதிநிதி பால் பீரோலி டம் கோலையில் ஒரு காகிதக் குழம்புத் தொழிற்சாலையை அமைப்பதுபற்றி கேட்டபோது, பிரிட்டிஷார் இப்பிரச்சினையில் எல்லா உதவிகளையும் அளிப்பதற்குத் தயாராக உள்ளனரென்றும், ஆனால் உதவியளிப்பதற்கு முன்னர் அத்தொழில் தனியார் துறையில் நடப்பதற்கு உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

தற்சமயம் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துவரும் பிரிட்டிஷ் பொருளாதார நிதி நிபுணர் குழுவில் இவர் ஒருவராவார்.

சேலத்தில் ஒரு தொழிற்சாலையாம்!

கைத்தறி உறுப்புக்களைத் தயாரிக்குமாம்

சென்னை, டிச. 8—

கைத்தறிக்குத் தேவையான முக்கிய உறுப்புகளைத் தயாரிக்க சேலத்தில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்படுமாம்.

சென்னை, மைசூர், கேரளம் ஆகிய மூன்று மாநிலங்களுக்கான தேவையை இந்தத் தொழிற்சாலை பூர்த்தி செய்யுமாம்.

சிறு கைத்தொழில்கள் நலனிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 10½ இலட்சம் சென்னை அரசாங்கம் இதற்காக செலவிடுமாம்.

ஆண்டொன்றும் ரூ. 12,20,000 செலவாகுமாம்; இதற்காக மத்திய அரசாங்கம் ரூ. 14,51,000 கடனை அளித்துள்ளதாம்.

நூல் கோர்வை சாதனங்கள், படல் தறிகள் உள்பட பல கைத்தறி உறுப்புகளை 420 தேர்ச்சி பெற்ற தொழிலாளர்கள் இங்கு தயாரிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

சாலை விபத்துக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

சென்னை, டிச. 7—

"1954-ம் ஆண்டைவிட 1955ல் அதிகமாக ஏற்பட்ட 200 விபத்துக்களில் மொத்தம் 48 பேர் மரணமடைந்தனர்" என்று, 1955-ம் ஆண்டு போலீஸ் இலாகா அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மந்திரியின் காரை மறித்தனர்!

திருப்பி வரும்போது, அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிகொண்டிருந்த கல்வி மந்திரியின் காரைத் தடுத்து நிறுத்தி, அவரோடு வாக்கு வாதம்புரியத் தொடங்கினராம்.

ஒரு மாணவர், மந்திரியின் காரிலிருந்த கொடியைப் பிடுங்கி எறிந்துவிட்டாராம்!

கழகச் செய்திகள்

வேம்படிதளம் தி. மு. க. துவக்கம்

5—12—56-ல் வேம்படிதளம் தோழர் டி. என். வரதராசன் இல்லத்தில் தோழர் செல்கோடன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில் கீர் வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: ப. புருஷோத்தமன், துணைச்செயலாளர்: ஆர். வி. பதி; பொருளாளர்: ம. சித்துராசு; மாவட்டப் பிரதிநிதி: எஸ். அர்த்தனரி. மற்றும் 18 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். விரைவில் துவக்கவிழா நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பம்பாய் — அந்தேரி தி. மு. கழகம்

2—12—55 காலை 10-30 மணி அளவில், அந்தேரி தி. மு. கழக இல்லத்தில், தோழர் தெ திரு நாவுக்கரசு தலைமையில், இளைஞர் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினபின், 'உதய ஞாயிறு' கையெழுத்தேட்டிற்குத் தோழர்கள் பு. ஆ. செந்தமிழ்ச்செல்வன், எஸ். திருஞானம் ஆகியோர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதுடன், மற்றும் சில தீர்மானங்களும் பிறை வேற்றப்பட்டன.

சேலம் 6-வது வட்ட தி. மு. கழகம்

5-12-56 இரவு 9 மணிக்கு, சேலம் 6-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் ஆர். முருகேசன் நடையில் தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் கழகச் செயலாளரின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டு தோழர்கள் கே. மாணிக்கம், கே. அரங்கண்ணன் ஆகியோர் முறையே செயலாளர், துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர். மற்றும் பல முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பம்பாய்—கம்பாலாஹில் தி. மு. கழகம்

5—12—56 இரவு 10½ மணிக்கு ஆஜி அலி நிடலில் தோழர் எ. சுப்பையா தலைமையில் நடைபெற்றக் இளைக் கழக மாதாந்திர உறுப்பினர் கூட்டத்தில் கடந்த மாத வரவு-செலவுகள் ஒப்புக்கொள்ளப் பட்டன.

சாத்தான்குளத்தில் கழகப் பொதுக்கூட்டம்

4-12-56 இரவு 7 மணிக்கு நெல்லை மாவட்டம் சாத்தான்குளத்தில் காந்தி மைதானத்தில் தோழர் நி. கா. செல்லையப்பன் தலைமையில் நடைபெற்றக் கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். எஸ். இளங்கோ, கே. சேர்மத்துரை ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

பாண்டமங்கலம் தி. மு. க.

8—12—56 இரவு 8-மணிக்கு கழக இல்லத்தில் நடைபெற்றக் இளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதி வசூலிப்பது குறித்து முடிவு செய்யப்பட்டதுடன், அரியலூர் இரயில் விபத்தில் மாண்டோர் குடும்பத்தாருக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது

கரனூர் தி. மு. கழகம்

8—12—56ல், தோழர் யூசுப் தலைமையில் நடைபெற்ற இளைச் செயற்குழுக் கூட்டத்தில் விரைவில் தேர்தல் நிதி திரட்டி அனுப்புவது என்று முடிவெடுக்கப்பட்டதுடன், அரியலூர் இரயில் விபத்தில் இறந்துபட்டவருக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

நகரி (சித்தூர் மாவட்டம்) தி. மு. கழகம்

5—12—56 இரவு நடைபெற்ற இளைக் கழக உறுப்பினர் கூட்டத்தில், தி. மு. கழகத் தேர்தல் நிதி திரட்டுவதற்கென, நிதிக் குழுவை அமைப்பதென்று முடிவு செய்யப் பட்டதுடன், அரியலூர் இரயில் விபத்தில் மாண்டவர்கள் குடும்பத் தாருக்கு அனுதாபம் தெரிவித்தும், மற்றும் சில தீர்மானங்களும் பிறை வேற்றப்பட்டன.

இறக்குமதியானகோதுமை விலை உயர்வைத் தடுக்கும்?

அமெரிக்காவிலிருந்து இதுவரை 30,000 டன் கோதுமையே இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது; இந்தச் சொற்பக் கோதுமையால் விலை உயர்வு இறங்காதாம்; ஆனால் கையிருப்பிலுள்ள இதர கோதுமையைக்கொண்டு விலை உயர்வைத் தடுப்பதற்கு இது உதவியுள்ளதாகத் தெரிகிறது.

சர்க்கார் ஊழியரைப் போல் ஆரம்ப ஆசிரியருக்கும் 'கிராக்கிப் படி' வேண்டும்

சென்னை மாநில சர்க்காருக்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சங்கக் கோரிக்கை

மதுரை, டிச. 10—சென்னை மாநிலத்திலுள்ள ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்குத் தரப்படும் கிராக்கிப் படி உயர்த்தப் படாததைக் கண்டித்தும், அண்மையில் சர்க்கார் வெளியிட்ட கல்வி வெள்ளையறிக்கையின்படி ஆசிரியர்—மாணவர் விகிதாச்சாரம் உயர்ந்தால், இப்போதுள்ள ஆரம்ப ஆசிரியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வேலையிழக்க நேரிடும் என்பதைச் சுட்டிக் காட்டியும், இந்த இக்கட்டான நிலையிலிருந்து ஆசிரியர்களை விடுவித்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமாறும் வழி செய்யும் வகையில், இப்போதுள்ள படி ஒரு ஆசிரியருக்கு இருபத மாணவர் என்ற விகிதத்தையே தொடர்ந்து அமுல் நடத்துமாறும், ஊதியத் திட்டக்குழு பொறிசுப்படி ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஊதிய உயர்வுடன் சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுவது போன்ற கிராக்கிப் படியும் கிடைக்கச் செய்யவேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளும் தீர்மானங்களை கடந்த மாதம் 25-ந் தேதியன்று சின்ன மனூரில் பெரியகுளம் தாலுகா உதவி பெறும் ஆரம்பப்பள்ளி ஆசிரியர் சங்கச் செயற்குழுவினர் கூடி நிறைவேற்றியிருந்தனர்.

ஆசிரியர் தூதுக் குழு—சட்ட மன்ற உறுப்பினர்கள் சந்திப்பு

மேற்படி ஆசிரியர்களுடைய இக் கோரிக்கைகளைத் திரு ஐ.டி.செகாதனை தலைவராகக் கொண்ட அவ்வாசிரியர் சங்கத் தூதுக்குழு ஒன்று, இத்திங்கள் 5-ந் தேதியன்று மதுரை நகரைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களைச் சந்தித்து அவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறது. (ந-தி.)

செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகம்

வாலாஜாபாத், டிச. 10—செங்கற்பட்டு மாவட்டத் தமிழாசிரியர் கழகத்தின் உறுப்பினர் கூட்டமொன்று கேற்ற இக்குள்ள இந்துமதப் பாடசாலையில் திரு. மயிலை. சிவ-முத்து தலைமையில் நடைபெற்றது.

திரு. மே. வீ. வேணுகோபால் அவர்களின் அறுபதாம் ஆண்டு நிறைவு விழா குறித்து திரு. மயிலை-சிவ. முத்து அவர்கள் பாராட்டுதெரிவித்துக்கொண்டார்

பின்னர் திரு. மாலைமணி, என். சஞ்சீவி, அ. மு. பரமசிவானந்தம், வே. இராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

இறுதியில் அரியலூர் இரயில் விபத்தில் மாண்டோர் குடும்பத் தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானமொன்று நிறை வேற்றப்பட்டது. (ந-தி.)

புதுமையான விசித்திரம்!

உடுமலைப்பேட்டையிலுள்ள உயர்நிலைப் பள்ளியில், பள்ளி நேரத்தின்போது வெளிப்புறம் உள்ள எல்லாக் கதவுகளையும் அடைத்துக் கொண்டு மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்கப்படுகிறதாம்!

இந்த நிலைமை கடந்த ஒரு வாரகாலமாகவே நீடித்து வருவதாகவும், பள்ளி வகுப்பு நேரங்களில் மாணவர்கள் வெளியே சென்று விடுகிறார்கள் என்பதே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது! (ந.-தி.)

செயற்கைக் 'கிரகம்' ரஷ்யாவும் அனுப்புமாம்

பாரிஸ், டிச. 8—செயற்கைக் 'கிரகம்' ஒன்றை வான வீதியில் அனுப்பப்போவதாக அமெரிக்கா ஏற்னவே அறிவித்துள்ளது.

1957—58-ல் செயற்கைக் 'கிரகம்' ஒன்றை ரஷ்யாவும் வான வீதியில் அனுப்பக்கூடும் என்று ரஷ்யப் பேராசிரியர் ஒருவர் கூறியுள்ளார்.

ஆகாயத்தில் பிராணிகள்!

பாரிஸ், டிச. 8—வான மண்டலத்தில் மிகவும் உயரத்தில் பிராணிகளுக்கு என்ன நேரிடுகிறது என்பதைக் கண்டறிய 68 மைல் உயரத்திற்குப் பிரயாணிக்க ரஷ்ய விஞ்ஞானிகள் அனுப்பியதாகவும், பின்னர் அத்தப் பிரயாணின் பாராசூட் மூலம் கொண்டுவரப்பட்டதாகவும் ராக்கெட் குண்டுகள் பற்றி இங்கு கடைபெற்ற மாநாட்டில் ரஷ்ய குழுத் தலைவர் பொக்ரோவோல்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ஆசிரியருக்குக் கடிதம்:

'ஜனநாயக சர்க்கார்' சிந்தித்துப் பார்க்குமா?

ஐயா,

இந்த ஜனநாயக சர்க்கார், காட்டு இலாகாவில், 'வாச்சர்'களுக்கு ஏற்கனவே சம்பளம் ரூ. 12-ம், பஞ்சப் படி ரூ. 18-ம், ஆகமொத்தம் ரூ 30 கொடுத்துவந்தார்கள். ஆனால் தற் பொழுது பஞ்சப்படியை ரூ. 25 ஆக ஆக்கிவிட்டு, சம்பளத்தை, ரூ 5-ஆகக் குறைத்துவிட்டார்கள். சம்பளத்தை ரூ. 12-லிருந்து ரூ 5-க்குக் குறைத்தது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கிறது. இந்த ரூ. 5 சம்பளத்தில் ஒரு குடும்பம் வாழ முடியுமா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இவர்கள் எத்தகைமான உதவியையும் ஏழை மக்களுக்குச் செய்ததில்லை; ஆனால் ஏழைகளின் மிகக் குறைந்த சம்பளத்தைத்தான் குறைத்தார்கள். இது மிகவும் வருந்தத்தக்க காரியம்.

ஆகையால் சம்பளத்தை எக் காரணத்தைக்கொண்டும் குறைக்கக்கூடாது என்பதையும், பஞ்சப் படியை எல்லோருக்கும் கொடுப் பதுபோல் கொடுக்கவும் அரசாங்கம் முன்வர வேண்டும். ஏழைகளின் குறைகளைச் சிந்தித்துப் பார்க்குமா இந்த சர்க்கார்?

—பி. எம். இரக்காமி, குத்தனர்.

டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து அனுதாபங்கள்

★

சென்னை மகளிர் மன்றம்

"தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவரும், இந்திய அரசியல் பேரறிஞர்களில் ஒருவரும், பகுத்தறிவு வாதியும், இந்திய அரசியல் சட்டத்தை உருவாக்கியவரும், இந்து மதச் சீர்திருத்த சட்ட கர்த்தாவாக இருந்து மகளிர் குலத்திற்கு மகத்தான சேவை செய்தவருமான டாக்டர் பி. ஆர். அம்பேத்கார் அவர்களின் மறைவு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மகளிர் குலத்திற்கும், பகுத்தறிவாளர் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாததாகும் அவரது சேவையைப் போற்றுகிறோம்—வழிபடுகிறோம்—விட்டுச் சென்ற பணியைத் தொடருவோம் என்ற உறுதியோடு இரங்கல் வணக்கம் செலுத்துகிறோம்; அவர் மனைவி மக்களுக்கு மன்றச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறோம்' என்று சென்னை மகளிர் மன்றச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

திண்டிவனம்:

6-12-56-ல், திண்டிவனம் கிடங்கில்சேரி, திருவள்ளுவர் கழகச்சார்பில், தோழர் எ. லோகாதன் தலைமையில் கருப்புச் சின்னங்களுடன் தோழர்கள் பலர் ஊர்வலம் வந்தனர். பின்னர், கழகக் கட்டிடத்தில், தோழர் கே. குமாரசாமி தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்

சென்னைமாவட்டதாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்:

தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தின் வளர்ச்சிக்கு ஈடுசெய்ய முடியாத டாக்டர் அம்பேத்கார் அவர்களின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தக் கொள்ளப்படுகிறது.

சென்னை—மைசூர் பிரீமியர் மெட்டல் பாக்டரி

டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து சென்னை தண்டையார் பேட்டை மைசூர் பிரீமியர் மெட்டல் பாக்டரி, இந்துஸ்தான் ரோலிங் மில்லைச் சேர்ந்த சுமார் 600 தொழிலாளர்கள், வேலை நிறுத்தம் செய்ததுடன், திரு. ஆர். கோவிந்தசாமி தலைமையில் அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பின்னர், கருப்புக் கொடிகளுடன் ஊர்வலமும் நடைபெற்றது.

கொடுங்கையூர் வள்ளுவர் அறநெறி மன்றம்

கொடுங்கையூர் அறநெறி மன்றச் சார்பில் டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்த அன்னார் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திருச்சியில் தி.மு.க. பொதுக்கூட்டம்

மு. கருணாநிதி கலந்து கொண்டார்

2—12—56 மாலை 6 மணிக்கு திருச்சி மதுரம் விளையாட்டு மைதானத்தில், தோழர் அம்பில் தருமலிங்கம் தலைமையில் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, எம். எஸ். மணி ஆகியோர் பேசினபின் அரியலூர் இரயில் விபத்தில் மாண்டோர் குடும்பத்தவருக்கு அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

மறுப்பு

"திருச்சியில் தோழர் கருணாநிதி பேசிய பொதுக்கூட்டமொன்றில் பெருங்கலவரம் நடைபெற்றதாகச் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டன. ஆனால் அப்படி எந்தவிதமான கலவரமும் நடைபெறவில்லை. அக்கூட்டத்தில் சுமார் 15,000-க்கு மேற்பட்ட மக்கள் திரண்டிருந்தனர். கூட்டம் நடந்துகொண்டிருக்கும்போது, 2 கற்களும் 1 அடி நீள மூங்கில் கம்பும் விழுந்தது. கூட்டத்தில் விழுந்த அந்த இரண்டு கற்களையும் வைத்துக் கொண்டு தோழர் மு. கருணாநிதி தொடர்ந்து பேசினார். மற்றப்படி வேறெந்த விதக் கலவரமும் நடையாது.

"ஒரு தின இதழில், 'டவுன் ஹாலில் நடந்த கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது' என்று செய்தி வந்திருக்கிறது; ஆனால், தோழர் மு. கருணாநிதி பேசிய பொதுக்கூட்டம் மதுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது கூட்டத்திற்கு வராமலேயே அப்பத்திரிகைகளின் நிருபர்கள் செய்தி தந்திருக்கிறார்கள்;"

என்று, திருச்சி நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் எம் எஸ். மணி அறிவித்திருந்தார்.

கல்லக்குடி தோழர்கள் பொதுப்பணி

கடந்த மாதம் 28-ந் தேதியன்று அரியலூருக்கு அருகில் நடைபெற்ற கோர இரயில் விபத்தின் போது, கல்லக்குடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் செங்குட்டுவன், மற்றும் கழகத் தோழர்களும், விபத்து நடைபெற்ற விவரம் கேட்டதும் உடனே சென்று காயம்பட்டோருக்கு முதற்சிகிச்சை அளித்தனர்.

அவர்களுடன் புதுர்பாளையம் தி. மு. கழகத் தோழர்களும் ஆலைத் தொழிலாளர்களும் மாணவர்களும் கலந்து கொண்டு மீட்பு வேலைகளில் பெரும் பங்கேற்றனர்.

(ந-தி.)

மணப்பாறை தி. மு. க.—மாணவர் இளைப் பொதுக் கூட்டம்

தோழர் மு. கருணாநிதி, அன்பில்-தருமலிங்கம் கலந்துகொண்டனர்

6-12-56 மாலை மணப்பாறை நேரு சதுக்கத்தில் தோழர் மா. இளங்கோன் தலைமையில் தி. மு. கழக மாணவர் இளைஞர் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, அன்பில் தருமலிங்கம் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினர்.

அண்ணாமலைநகர் தி.மு.க.-மாணவர் இளை

29—11—56 மாலை 6 மணிக்கு, அண்ணாமலைநகர் தி. மு. கழக—மாணவர் இளைஞர் செயற்குழுக் கூட்டம் தோழர் து. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றபோது, வருகிற ஆண்டில் இரு தினங்கள் 'திராவிடர் திருநாள்' கொண்டாடுவதெனவும், 'ஹோம்லண்ட்' இதழுக்குச் சந்தா சேர்க்க முயற்சிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

மன்னார்குடி தி. மு. க.—மாணவர் இளை அமைப்பு

4—12—56 மாலை 6½ மணிக்கு, மன்னார்குடி மூர்த்தி கட்டிடத்தில் தோழர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் தி. மு. கழக—மாணவர் இளை அமைக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: பி. சண்முகம்; துணைச் செயலாளர்: கோ. மணி; பொருளாளர்: சு. இராமலிங்கம், விளம்பர உறுப்பினர்: அ. இராசகோபாலன்.

மதுரையில்

தேர்தல் நிதி நாடகம்!

★

அண்ணா

அவர்களும் குழுவினரும்

நடிக்கும்

'நீதிதேவன் மயக்கம்'

(சீர்திருத்த நாடகம்)

★

நாள் விரைவில் அறிவிக்கப்படும்

தி. மு. கழகத் தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

★

துறையூர்:

பாரதி தியேட்டரில்

17—12—56 காலை 9-மணிக்கு

தலைவர்: டி. பி. அழகமுத்து

இரா. நெடுஞ்செழியன்
'சங்க கால அரசியல்'

எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் கழகமும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

திருச்சி:

தேவர் மன்றத்தில்

15—12—56 காலை 9 மணிக்கு

தலைவர்: எம். எஸ். மணி

நாகூர் அனீபா
இன்னிசை வழங்குவார்

இரா. நெடுஞ்செழியன்
'இலக்கிய இன்பம்'

எம். ஜி. இராமச்சந்திரன்
'கலையும் வாழ்வும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

★

மதுரை:

தமுக்கம் மைதானம்
திறந்தவெளி அரங்கில்

15—12—56 இரவு 8 மணிக்கு

நாகூர் அனீபா
இன்னிசை வழங்குவார்

இரா. நெடுஞ்செழியன்
'வள்ளுவர் காட்டும்
அரசியல் நெறி'

எம். ஜி. இராமச்சந்திரன்
'நாடும் நடிகர்களும்'

என்ற தலைப்புகளில் பேசுவர்.

தேர்தல் நிதிச் சிறப்புக் கூட்டங்கள்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன்

ஆகியோர் சுற்றுப்பயணம்

டிசம்பர் 15:	காலை	....	திருச்சி
	மாலை	....	மதுரை
16:	காலை	....	கோவில்பட்டி
	மாலை	....	தூத்துக்குடி
17:	காலை	....	துறையூர்
	மாலை	....	நாமக்கல்

குறிப்பு:—மேற்கண்ட ஊர்கள் தவிர வேறு எந்த ஊருக்கும் இப்பொழுது வருவதற்கு இயலாதாதலால், வேறு யாரும் இப்பொழுது அழைப்பு விடவேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வாழ்க, வி. சக்கரைச் செட்டியார்!

திரு. வி. சக்கரைச் செட்டியார் அவர்கள் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவரும், தமிழ் நாடு தொழிற் சங்கக் காங்கிரசின் தலைவருமாவார்.

1918-ல், முதன் முதலில் திரு. சக்கரைச் செட்டியார் அவர்கள் திரு வாடியா, திரு வி. க., சிங்காரவேலர் ஆகியோருடன் இணைந்து நின்று 'மதராஸ் லேபர் யூனியன்' அமைத்து, அதன் உரிமைக்காகப் போராடினர்.

பின்னர், முனிசிபல் தொழிலாளர் சங்கம், டிராம்வே தொழிலாளர் சங்கம், பெரம்பூர் இரயில்வே தொழிலாளர் சங்கம் ஆகியவற்றில் முக்கியப் பங்கேற்றுப் பணியாற்றினர்.

பின்னர், 1924-ல் நடைபெற்ற அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரசில் பங்கேற்றுத் தொழிற் சங்கச் சட்டத்தை நிறைவேற்றப் பாடுபட்டார்.

இந்தியர்களே இடம் பெற்றில்லாதிருந்த விட்லிக் கமிஷனை திரு சக்கரை அவர்கள் பகிஷ்கரித்தார்.

அவர் மேயராக இருந்த காலத்தில், மோட்டார் போக்குவரத்து வேலைநிறுத்தத்தின்போது குழு ஒன்று நிறுவி, மேயர் நிதியாக ரூ. 30,000 திரட்டித் தொழிலாளர்களுக்கு உதவினர்.

1943-ல், சென்னை மாகாணத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1948-ல் அகில இந்தியத் தொழிற் சங்கக் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட அவர், கட்சி பேதம் பாராட்டாமலும், தெளிந்த தொழிற் சங்க ஜனநாயக உணர்ச்சிப் பொலிவோடும், உறுதியோடும் அஞ்சாமையோடும் பணியாற்றி வந்துள்ளார்.

ஐம்பது ஆண்டுகட்கு முன்பே, அவர், திலகர், வ. உ. சி., பாரதியார் போன்றோருடன் இணைந்து நின்று தேசியத் தலைவராகவும், இன்றும் அவர் சிறந்த சனாயக வாதியாகவும் விளங்குபவராவார்.

அரசியல் துறையில் குறிப்பாக அவர் 1917-ல், ஆனி பெசண்ட் அம்மையின் 'ஹோம்ரூல் லீக்' (குடியாட்சிக் கழகம்)கில் பணியாற்றினது, 1918-ல் இங்கிலாந்தில், பாராளுமன்ற விசாரணைக் குழுமுன் இந்திய சுதந்திரத்திற்காக வாதாடினது, 1928-ல் சைமன் கமிஷன் எதிர்ப்பு இயக்கத்தில் பங்கேற்றது, 1930—32 சட்ட மறுப்புக் காலங்களில் வெள்ளை அடக்குமுறையைக் கண்டிக்க பிரஜா உரிமைச் சங்கத்தில் இணைந்து உழைத்தது, இரண்டாவது உலக யுத்த விளைவாக இந்தியா வந்த மலேயா அகதிகளுக்கு, அகதிகள் நிவாரணக் குழுத் தலைவராக இருந்து பணியாற்றினது போன்றவை குறிப்பிடத்தக்கவையாகும்.

இப்பெருமைக்குரிய திரு. சக்கரை அவர்களின் 76-வது பிறந்த தின விழாவினைக் கொண்டாட தமிழ் நாடு தொழிற்சங்கக் காங்கிரசார் ஏற்பாடு செய்துள்ளனர்.

திரு. சக்கரைச் செட்டியார் அவர்கள் இன்னும் நெடுங் காலம் வாழ்ந்து, தமிழகத் திற்குப் பணியாற்றவேண்டுமென்ற நமது இதயபூர்வமான அவாவையும் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

(ஆ-ர்.)

மெல்போர்னில் நடைபெற்ற ஒலிம்பிக் ஆட்டப் போட்டிகளில் கலந்துகொள்வதற்காக இந்திய ஆட்டக் குழுவினருக்கு எல்லா வகைச் செலவுகளுக்கும், 1956—57-ம் ஆண்டில் மானிய உதவியாக ரூ. 1,57,496—2—3-ம் கடனாக ரூ. 1,10 500-ம் வழங்கப்பட்டதாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது

மதுராந்தகத்தில்

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

நிகழ்ச்சிகள்

மதுராந்தகம் சவரத் தொழிலாளர் சங்கப் பொதுக்கூட்டம், 12—12—56 புதன் அன்று மாலை நடைபெறும். தி. மு. க. பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், முகவை ஆர்.எஸ். பாண்டியன், ஓ. என். துரைபாபு (பஞ்சாயத்து போர்டு தலைவர்) ஆகியோர் கலந்துகொள்ளுகிறார்.

அன்று பகல் 2-மணியளவில், புலம்பாக்கம் பெல்ஜிய குஷ்ட நிவாரண மருத்துவ நிலையத்தைப் பொதுச்செயலாளர் பார்வையிடுவார்.

வி. சக்கரை செட்டியார்

76-வது பிறந்த நாள் விழா

12—12—56 மாலை 6-மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் சென்னை மேயர் திரு. கே. என். சீனிவாசன் தலைமையில் தொழிற் சங்க காங்கிரஸ் தலைவர் திரு வி. சக்கரை செட்டியார் அவர்களது 76-வது பிறந்த நாள் விழா நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

12—12—56 மாலை 6-30 மணிக்கு சென்னை-இராயபுரம் சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப் பணிமனையில் தோழர் திருட்டிணமூர்த்தி தலைமையில் 'முத்தமிழ்' என்னும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

12—12—56 மாலை 7-மணிக்கு சென்னை — சூளை ஊ. பு. அ. சௌந்திர பாண்டியனார் மினைவுப் படிப்பக மனையில், தோழர் ரா. கு. சாமி தலைமையில், 'ஆத்திரமும் காத்திரமும்' என்னும் பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை-37-வது வட்ட தி.மு.க. செயற்குழு உறுப்பினர்கட்கு:

12—12—56 இரவு 9 மணிக்கு சென்னை—37-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். தேர்தல் நிதி திரட்டுவது குறித்து ஆராயப்படும்.

நமனசமுத்திரம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்கூட்டு:

14—12—56 காலை 8 மணிக்கு தோழர் இரா. மா. பொன்னுசாமி இல்லத்தில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அது போது, தி. மு. க. தேர்தல் நிதி திரட்டுவது குறித்து ஆராயப்படும்.

சினிமாக்களை ஒழுங்குபடுத்த தேசிய பிலிம் போர்டு

புதுடில்லி, டிச. 10—

நல்லெண்ணங்களை தூண்டக் கூடிய வகையிலும், கலாச்சார, கல்வித் துறைகளில் பயன்படும் வகையிலும் சினிமாக்களை ஒழுங்கு படுத்தும் நோக்கத்துடன் ஒரு தேசிய பிலிம் போர்டு அமைப்பதற்கான மசோதா, மக்கள் சபையில் அமைச்சர் கேஸ்கரால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

திருமணங்கள்

12—12—56 காலை 6 மணிக்கு சென்னை—நுங்கம்பாக்கம், புதுத் தெரு, எண் 6 இல்லத்தில் தோழர் வ. சங்கரநாராயணன் தலைமையில் தோழர் என். கே. நடராசன்—தோழியர் காமாட்சி திருமணம் நடைபெறும். தோழர்கள் கண்ணதாசன், தி. சு. கிள்ளிவளவன் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

12—12—56 காலை 9 மணிக்கு சென்னை—சூளை பெரிய தம்பி முதலி தெரு, எண் 30 இல்லத்தில் தோழியர் சந்தியவாணிமுத்து தலைமையில், தோழர் வி. பி. முனியசாமி—தோழியர் பஞ்சவர்ணம் திருமணம் நடைபெறும். தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி, தோழியர்கள் தாமரைச்செல்வி, இராசம்மாள் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

வட ஆற்காடு மாவட்டத்தில்

தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா ... கழகத் தோழர்களும்

அவர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

★

திருவண்ணாமலையில்:

14—12—56 வெள்ளி இரவு 10-மணிக்கு

குடியேற்றத்தில்: [ஒரே நாளில் இரண்டு நாடகங்கள்]

15—12—56 சனி மாலை 6-மணிக்கு, இரவு 10-மணிக்கு

திருப்பத்தூரில்:

16—12—56 ஞாயிறு இரவு 10-மணிக்கு

★

கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே! கழகம் வெற்றிமுரசு கொட்ட கடமையாற்றத் திரண்டு வாரீர்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தி. மு. க. தேர்தல் நிதி திரட்டும் வாரம்

கிளைக் கழகத் தோழர்களே! ஆதரவாளர்களே!

இம்மாதம் 10-ந் தேதி முதல் 16-ந் தேதி வரையுள்ள ஒரு வார காலம் தேர்தல் நிதி திரட்டும் வாரம் என்பதை அறிவீர்!

ஊர்தோறும், வீதிதோறும், வீடுகள்தோறும் சென்று நிதிதிரட்டித் தலைமை நிலையத்திற்கு உடன் அனுப்பித்தர வேண்டுகிறோம்.

கழகம் வெற்றி முரசு கொட்ட கடமையாற்றுவீர்!

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

சென்னை மாநிலத்தில்...

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தவிர 87 கொலைக் குற்றங்கள், 287 திருட்டுக் குற்றங்கள், 6,618 வீடு புகுந்து திருட்டுகள், 2,732 கால்நடை திருட்டுகள், 785 சொத்து மீது பெரிய குற்றங்கள், 20,156 சாதாரணக் குற்றங்கள் இந்த ஆண்டில் பதிவாகியுள்ளதாம்.

மக்கள் தொகை அடிப்படையில் குற்றங்களை மதிப்பிடும்போது பேருக்கு ஒரு வழக்குவீதம் உள்ளதாம்.

குற்றவாளி கண்டு பிடிப்பு 41·3 சதவிகிதத்திலிருந்து 43 6 சதவிகிதம் உயர்ந்து உள்ளதாம்.

இராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, நரசிம்மராயன் செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.